நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 180/2019

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | குப்புசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜப்பன் |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.01 PM)

1. எப்பொழுது எதிரியும் அவரிடம் கைப்பற்றப்பட்ட பொருளையும் எங்கே எத்தனை மணிக்கு மேட்டூர் சிறப்பு இலக்கு படையை சேர்ந்த காவலர்கள் ஒப்படைத்தார்கள் என்றால் நானும் அந்த சிறப்பு இலக்கு படையில் ஒரு உறுப்பினர் ஆவேன். நானும் ரோந்து பணிக்கு சென்றேன். சான்றுப்பொருள் கைப்பற்றப்படும்போது

நான் உடனிருந்தேன்.

2. இந்த வழக்கில் சம்பவம் தொடர்பாக இரகசிய தகவல் எதுவும் எங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. வழக்கமான ரோந்துப்பணியை தான் நாங்கள் மேற்கொண்டோம். எதிரியை நான் தான் கைதுசெய்தேன். என் முன்னிலையில் தான் சம்பவம் நடைபெற்றது. இந்த வழக்கில் யாரும் புகார் கொடுக்கவில்லை.

3. புகார் இல்லாமல் எதிரி தனது கையில் வன உயிரினத்தை வைத்திருந்ததன் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும், சிறப்பு இலக்கு படை கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் குற்ற நிகழ்வு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசாஆ.5 தனியறிக்கையின் அடிப்படையில் தான் இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. 11.11.2012 ம் தேதி சுமார் இரவு 08.00 மணிக்கு சின்னகாவல் மாரியம்மன் கோவில் அருகில் வைத்து எதிரியை பார்த்தோம். சின்னகாவல் மாரியம்மன் கோவில் ஒட்டி கொளத்தூரிலிருந்து மாதேஸ்வரன் மலை செல்லும் புறவழிச்சாலை உள்ளதென்றால் சரிதான். மேற்படி மாரியம்மன் கோவில் மற்றும் புறவழிச்சாலைக்கு வடக்கு பகுதியில் எதிரியை பார்த்து கைதுசெய்தோம்.

5. முதல் விசாரணையில் வேட்டையாடும் நாய் மூலம் உடும்பை வேட்டையாடியதாக சொன்னார்கள் என்று யாரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரி சொன்னதாக தான் குறிப்பிட்டுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் வைத்து இரவு 08.00 மணிக்கு எதிரியை நான் தான் கைதுசெய்தேன்.

6. சம்பவயிடத்திற்கு நாங்கள் போகும் முன்பாகவே சிறப்பு இலக்கு படையினர் அங்கு இருந்தார்கள். நாங்களும் அவர்களுடன் சென்று இணைந்துக்கொண்டோம். எவ்வளவு நேரமாக நாங்கள் செல்வதற்கு முன்னால் சிறப்பு இலக்கு படையினர் அங்கு இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. சுமார் 6 நபர்கள் இருந்தார்கள்.

7. நாய் எந்த இடத்தில் வைத்து உடும்பை பிடித்தது என்று எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு போகும்போது நாய் எதுவும் அங்கு இல்லை. உடும்பை வெள்ளையன் (எ) சுந்தர்ராஜ் தனது கையில் வைத்திருந்தார். வனப்பகுதியை

ஒட்டி 100 மீட்டர் தாண்டி சென்றால பொதுப்பணிதுறைக்கு சொந்தமான இடம் உள்ளதென்றால் சரிதான்.

8. நான் சம்பவயிடத்திற்கு போகும்போது எதிரி காட்டுக்குள் செல்வதை தூரத்திலிருந்து பார்த்தேன். எதிரி காட்டுக்குள் செல்வதை இரவு 08.00 மணிக்கு பார்த்தேன். 08.45 சுமாருக்கு வனப்பகுதியில் இருந்து கையில் ஒரு உடும்பையும், கொடுவாளையும் வைத்துக்கொண்டு வனப்பகுதியில் இருந்து வந்தார்.

9. 08.00 மணிக்கு எதிரியை பார்த்துவிட்டு அந்த பகுதியை பார்வையிடுவதற்காக சென்றுவிட்டு மீண்டும் திரும்ப வரும்போது எதிரியை பார்த்தேன். மேட்டூர் வனச்சரக அலுவலகத்தில் இருந்து 3 நபர்கள் இரண்டு இருச்சக்கர வாகனங்களில் சம்பவயிடத்திற்கு சென்றோம். மேற்படி எதிரி வனத்திற்குள் செல்வதை நாங்கள் தடுக்கவில்லை. எப்படியும் அந்த வழியாகத்தான் திரும்பி வரவேண்டும் என்று விட்டுவிட்டோம். திரும்பி வருவதற்கு அந்த ஒரு பாதை மட்டும் தான் உள்ளது.

10. நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், உண்மையில் எதிரி அவ்வாறு வனத்திற்குள் சென்றிருந்தால் உடனடியாக நாங்கள் சென்று தடுத்திருப்போம் என்றால் சரியல்ல. மேட்டூர் வனச்சரகத்தை சேர்ந்த நாங்கள் ரோந்துக்காக நாங்கள் 3 பேரும் சென்றுவிட்டோம். சிறப்பு இலக்கு படையை சேர்ந்த நபர்கள் மேற்படி மாரியம்மன் கோவில் அருகில் தான் இருந்தார்கள்.

11. எதிரியையும், உடும்பையும் தான் நான் பார்த்தேன். நாயை நான் பார்க்கவில்லை. வனச்சரக அலுவலகத்திற்கு இரவு 10.00 மணிக்கு வந்துவிட்டோம். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் பதிவுசெய்தேன். H நமுனாவை நான் தான் தயார் செய்தேன். படிவம் 95 ஐ வனச்சரகர் பழனிசாமி தயார் செய்தார். அந்த பகுதியில் மின்விளக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

12. எதிரியை 100 மீட்டர் இடைவெளியில் வைத்து பார்த்தேன். 100 மீட்டர் இடைவெளியில் வைத்து இரவு நேரத்தில் வனப்பகுதியில் வைத்து எதிரியை நான் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் மரங்கள் எதுவும் இல்லை. அந்த இடத்தில் மரங்கள் உள்ளதென்றாலும், நான் வழக்கிற்காக மாற்றிமாற்றி முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல.

13. எதிரியை அழைத்து வரும்போது ரோந்துக்கு சென்ற நாங்கள் 3 நபர்கள் தான் மேட்டுர் வனச்சரகர் அலுவலகத்தில் இருந்தோம். எதிரியை தவிர வேறு யார் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. அசாஆ.3 H நமுனாவில் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

14. கைப்பற்றப்பட்ட உடும்பை கால்நடை மருத்தவரை வரவழைத்து 12 ம் தேதி பிரேத பரிசோதனை மேற்கொண்டு அந்த உடும்பை வனச்சரக அலுவலகத்தில் புதைத்து விட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக சிறப்பு இலக்கு படையை சேர்ந்த காவலர்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

15. எதிரியின் வீடு சம்பவயிடத்திற்கு அருகில் தான் உள்ளதென்றால் சரிதான். பொதுவாக மலையை ஒட்டி வசிக்கும் மக்கள் பாதுகாப்பிற்காக நாய் வளர்ப்பது வழக்கம் என்றால் சரிதான். அதுபோலத்தான் எதிரியும் தனது பாதுகாப்பிற்காக நாய் வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. வனத்தை ஒட்டி எதிரியின் வீடு இருப்பதால் ஆடு, மாடுகளின் உணவு தேவைக்காக இலை,தழை பறிக்க வனத்திற்குள் செல்வார்கள் என்றால் சரிதான்.

16. மேற்படி ஆடு, மாடுகளின் உணவு தேவைக்காக சென்ற எதிரியை சிறப்பு இலக்கு படையினர் பார்த்துவிட்டு எங்களுக்கு தகவல் கொடுத்தார்கள் என்றாலும், நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் இந்த சம்பவம் இரவு நேரத்தில் நடைபெறவில்லை என்றாலும், காலை நேரத்தில் மேற்படி ஆடு, மாடுகளின் உணவு தேவைக்காக இலை,தழைகளை வெட்டுவதற்காக எதிரி வனத்திற்குள் சென்றார் என்றாலும், அப்போது சிறப்பு இலக்கு படையினர் எதிரியையும், உடும்பையும் பிடித்துக்கொண்டுவந்த வனச்சரகர் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் என்றாலும், அதன் பேரில் எதிரி மீது பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

17. எதிரி தழைவெட்ட சென்றணு நேரத்தில் உடும்பு அங்கு கிடந்ததை வைத்து எதிரிதான் வேட்டையாடியதாக கொடுக்கப்பட்ட தவறான தகவலின் அடிப்படையிலும், சம்பவயிடத்தை ஒட்டி எதிரியின் வீடு அமைந்துள்ளதை சாதகமாக வைத்தும் இந்த பொய் வழக்கு பதிவுசெய்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(02.45 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**